# இலங்கையின் வட பிரதேச அபிவிருத்தியிலான சமூகப்பண்பாட்டுப் பரிமாணங்கள்

வி. நித்தியானந்தம்

**ஆய்வுச்சுருக்கம் :**

பிரதேசமொன்றின் அபிவிருத்தி பற்றிய தேடலானது சமூகப் பண்பாட்டு மாதிரிகளுக்குள் அதிகம் பிரபலிப்பதாக விளங்குகிறது. இலங்கைத் தமிழரின் அரசியல் பொருளாதாரப் பாரம்பரியத்திலும் அவற்றினை பேணுவதிலும் சமூகப் பண்பாட்டுக் குறிகாட்டிகள் தவிர்க்கமுடியாத பிணைப்பைக் கொண்டுள்ளன. சிறப்பாக இயற்கை வளங்கள் மனித வளங்கள் என்பனவற்றின் பங்களிப்பானது அபிவிருத்தியை அடைவதற்கு உரித்தான வாய்ப்புக்களை அதிகமாகவே கொண்டுள்ளது. அவற்றை சரிவரவும் நவீன தொழில்நுட்ப வசதிகளுக்குட்படுத்தியும் தொழிற்துறை சார் நவீனத்துவத்தின் கவனம் செலுத்துதினூடாகவும் சமூக பண்பாட்டு மாதிரிகளை செழுமைப்படுத்தி வெற்றி கொள்வது அவசியமான ஒன்று. வடக்குப் பிரதேசம் தனித்துவமான பிரதேசமாக புராதன காலம் முதல் அந்நிய அரசுகளின் காலத்திலும் அத்தகைய முக்கியத்துவம் சமூகப் பண்பாட்டுத் தளத்தில் பேணப்பட்டு வந்துள்ளன. இதிலிருந்து மாறுதலைச் செய்யவும் பொருளாதார செழிப்பினை மீட்டவும் முதலீட்டாளர்களின் பங்களிப்பை அதிகரிக்கவும் சரியான சிந்தனை முன்னெடுக்கப்படுவதோடு வெற்றி கொள்ள வகையிலான முயற்சியாண்மைகள் சம காலத்தில் அவசியமானது.

**திறவுசொற்கள் :** சமூக பண்பாடு. சுரண்டல். பிரதேச அபிவிருத்தி. அரசியல் பொருளாதாரம். நட்பு நிலை அபிவிருத்தி. சமூக முதலீடு

## 1. அறிமுகம்

ஈழத் தமிழர் அபிவிருத்தியின் சமூகப்பண்பாட்டுப் பரிமாணங்களைப் பார்க்க முற்படும் போது, அதனை 'வட பிரதேசம்' என்று தனியாகக் குறிப்பிட்டு அதனை மாத்திரம் எமது அக்கறைக்குட்படுத்துவதற்கு பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடும் காரணம். அதாவது, அவர் வார்த்தைகளில் "இலங்கைத் தமிழர் என்ற கோட்பாடு இலங்கையின் வட பாகத்தில் வாழும் தமிழர்களையே குறிப்பிடுகின்றது..." (*யாழ்ப்பாணம் : சமூகம், பண்பாடு, கருத்து நிலை, பக். 2*) என்பதாகும். இது, அவரே குறிப்பிடுவது போன்று, சிங்கள மக்களின் கருத்தாக இருந்தாலும், எமது பகுப்பாய்வின் பெரும்பகுதியைச் சிங்கள மக்களுடனான ஊடுதொடர்பே ஆக்கிரமித்து நிற்பதால், அதனுடன் ஒத்துப் போவதில் தவறில்லை என்றே கூறலாம்.

## அபிவிருத்தி பற்றிய வரையறையும் வடக்கின் நிலைமையும்

பிரதேசமொன்றின் பொருளாதார அபிவிருத்தி என்பது பல்வேறு காரணிகளின் ஒருமித்த செயற்பாடு என்பதாகவே கொள்ளப்பட வேண்டும். இவ்வாறான காரணிகளுள் அடிப்படைத்தன்மை வாய்ந்ததும் முதன்மையானதும் அப்பிரதேசத்திலான வளங்களின் கொடை என்பதேயாகும். இத்தகைய வளங்களின் கொடை இரு பிரிவுகளுக்குள் அடக்கப்படலாம். அவையாவன, இயற்கை வளங்களும் மனித வளங்களும் ஆகும். இவையிரண்டும் ஒரு நாட்டின் அல்லது அதனுள்ளான ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்கு மிகவும் அவசியமானவை. எனினும், அபிவிருத்திச் செய்முறையின் போது இவற்றின் பங்களிப்பு, எல்லா நேரங்களிலும், இவை இரண்டும், ஒத்திசைவு பெறக்கூடிய ஒரு முறையில் அமைவதாயிருக்குமென எதிர்

பார்க்க முடியாது. அதற்குப் பதிலாக, அபிவிருத்தியின் சில தருணங்களில் அவை தம்மத்தியில் ஒன்றுக்கொன்று முரணானதொரு முறையிற் செயற்படவும் கூடும். இந்த முரண்பாட்டிலிருந்து தான், ஒரு சாதாரண சூழலில், அபிவிருத்தியின் மீது சமூகப் பண்பாட்டுக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதென்பதும் ஊற்றெடுக்கின்றது. எனினும், இது பற்றிச் சிறப்பாகக் கவனம் செலுத்துவதற்கு முன்னதாக, இயற்கை, மனிதவளப் பங்களிப்பானது அபிவிருத்தியைப் பொறுத்தவரை எவ்வாறு செயற்படுகின்றதென்பதை, ஒரு பொது நிலையில், விளங்கிக் கொள்வது அவசியமாகின்றது.

ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் அபிவிருத்தியை மிக எளிமையானதொரு முறையில் வரையறை செய்வோமாயின், அதன் முதல் கட்டத்தில், குறிப்பிட்ட நாட்டின் அல்லது பிரதேசத்தின் இயற்கை வளங்களும் மனித வளங்களும் ஒருங்கிணைக்கப்பட்டுப் பொருட்கள் சேவைகளின் உற்பத்தி நடைபெற வேண்டும். அதன் அடுத்த கட்டத்தில், இத்தகைய உற்பத்தி நடத்தை அங்கு வாழும் அனைத்து மக்களையும் ஏகோபித்த முன்னேற்றத்துக்கு இட்டுச் செல்வதாயிருக்க வேண்டும். மக்கள் முன்னேற்றம் எனும் போது, அது வெறுமனே அவர்களின் வாழ்வாதாரத்துக்கான பொருட்கள் சேவைகளின் உற்பத்தியை மாத்திரம் குறித்து நிற்பதொன்றன்று. அதனுடன் இணைந்ததாகச் சமூகப் பண்பாட்டு ரீதியாகவும் மக்கள் மேம்பாடடைந்து, ஓர் ஒட்டுமொத்த நிலையில், தமது வாழ்க்கைத் தரத்தைத் தொடர்ச்சியான ஒரு முறையில் உயர்த்திக் கொள்வதையும் இது கூடவே சுட்டி நிற்கும் ஆகவே, வாழ்க்கையை மேன்மேலும் மெருகுபடுத்திச் சுமுகப்படுத்தும் நானாவித வசதிகளையும் தொடர்ந்து பெற்றுக் கொள்ளும் ஒரு செல்நெறி தான் அபிவிருத்தி எனலாம்.

எனினும், இந்தச் செல்நெறியின் ஒரு கட்டத்தில், வாழ்க்கைத்தர உயர்வின் தொடர் அதிகரிப்பு என்பது ஒரு புறமிருக்க, ஏற்கெனவே பெற்றுக்கொண்ட வாழ்க்கைத் தரத்தைப் பேணி அதனைத் தக்க வைத்துக் கொள்வதும் அபிவிருத்தியின் முக்கிய தேவையாகின்றது. ஏனெனில், அபிவிருத்தியின் ஏறக்குறைய அனைத்துப் பெறுபேறுகளும் 'பெறுமானத் தேய்வு' என்ற நிபந்தனைக்குட்பட்டிருப்பதால், அவற்றை உரியவாறு பேணி, வேண்டியவிடத்து, அவற்றைப் புதுப்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு செய்யாதுவிடின், ஏற்கெனவே இடம்பெற்ற அபிவிருத்தியில் ஒரு தொய்வுநிலை உண்டாகி, அது, அபிவிருத்தியை, அதன் நேர்க்கணிய நிலையிலிருந்து ஓர் எதிர்க்கணிய நிலைக்கு எடுத்துச் செல்வதைத் தவிர்க்க முடியாது. ஆகவே, அபிவிருத்தி என்பது புதியவற்றைத் தேடுவதுடன், ஏற்கெனவே பெற்றுக்கொண்டவற்றைப் பேணிப் பராமரிப்பதையும் உள்ளடக்கும்.

ஆனால், இவ்வாறான இயல்பு நிலைத் தேய்மானம் என்பதற்குப் புறம்பாக, வாழ்க்கைத்தர உயர்வு நோக்கி ஏற்கெனவே பெறப்பட்ட வசதிகள் ஒரு வலிந்த நிலைக்குட்பட்டு முறிவடையும் அல்லது நலிவடையும் நிலைமையும் ஏற்படலாம். அது மாத்திரமன்றிச் சில வேளைகளில் அபிவிருத்தி மூலம் பெறப்பட்ட வசதிகளை வாபஸ் பெறவேண்டிய ஒரு சூழல் உருவாகி, அதன் மூலம் அவை தேய்வடைவதற்குப் பதிலாக, அவை முற்றாகவே 'இல்லை' என்று ஆகிவிடுவதற்கான சந்தர்ப்பங்களும் நாடுகளின் பொருளாதார வரலாறுகளில் நிறையவே இடம் பெற்றிருக்கின்றன. உலக நாடுகள் மத்தியில் காலத்துக்குக் காலம் மூண்ட யுத்தங்கள் இதனைத் தான் சாதித்துள்ளன. அப்போதெல்லாம், அபிவிருத்தி என்பது தனது நேர்க்கணியத் தன்மையை இழந்து ஓர் எதிர்க்கணிய வளர்ச்சி என்பதாக ஆகிவிடுகின்றது.

அபிவிருத்தி பற்றி நாம் மேலே முன் வைத்த வரையறையை இலங்கையின் வடக்கு மீது பிரயோகிப்பின், அபிவிருத்தி பொறுத்து நாம் எடுத்துக்கூறிய அனைத்து அம்சங்களுக்குமான

ஓர் இருப்பிடமாகவே அது விளங்கியிருப்பதைக் காணலாம். நீண்ட காலத்தில் எமது வரைவிலக்கணத்துக்கு அமைவாகவே அதன் அபிவிருத்தி அநுபவம் காணப்பட்டது. ஆனால் கிட்டிய காலத்துக்கு வரும்போது, அதன் யதார்த்தம் இலங்கையின் வடக்குக்கிழக்கில் 20 ஆம் நூற்றாண்டின் இறுதிக்கட்டம் முதல் 21 ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தை உள்ளடக்கியதாக ஏறக்குறைய மூன்று தசாப்தங்கள் வரை நீடித்திருந்த இனத்துவ யுத்தம் என்பதாக வெளிப்படுகின்றது. இக்காலகட்டத்தில், மக்கள் ஏற்கெனவே பெற்றுக் கொண்டிருந்த வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதென்பது ஒரு புறமிருக்க, அதனைப் பேணிப் பாதுகாப்பதென்பது யுத்த அலுவல்கள் காரணமாக முற்றாகவே துர்லபமாயிற்று. அதனால், இப்பிரதேசத்தின் வளர்ச்சியானது 'எதிர்க்கணிய அபிவிருத்தி' என்பதாகவே வெளிப்பட்டது. அது மாத்திரமன்றி, நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் அபிவிருத்திக்குதவக்கூடிய இயற்கை வளங்களும் மனித வளங்களும் பெருமளவில் அழிக்கப்பட்டன என்பதும் நிதர்சனமானதோர் உண்மையாகும். அப்போது நிலவியிருந்த கீழ்க்கட்டுமான வசதிகள் கூட இந்த அழிவிலிருந்து தப்பவில்லை. அவ்வாறு தப்பிப் பிழைத்திருந்தவற்றிற் கணிசமானவை யுத்த தேவைகள் கருதி ஏதோ வகையில் முடக்கப்படுவதும் இடம்பெற்றது. அப்போது அவற்றை அபிவிருத்தி முயற்சிகள் கருதி எந்த வகையிலும் பயன்படுத்த முடியவில்லை. எனவே, ஒட்டுமொத்தமாக நோக்கின், வடக்குக்கிழக்கு அபிவிருத்தி என்பது கிட்டிய காலத்தில் பின்னோக்கித் தள்ளப்பட்டு, அதன் தொடக்கக் கட்டத்தை நோக்கித் திசை திருப்பி விடப்பட்டிருந்ததெனலாம்.

இது இப்பிரதேசத்தின் அபிவிருத்தி மீது, நடப்பு நிலையில் எவ்வாறானதொரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்ற வினாவை எழுப்புவோமாயின், அதற்கான விடை அபிவிருத்தி முயற்சிகள் பலவற்றையும் மறுபடி புதிதாகவே ஆரம்பிக்க வேண்டிய ஒரு கட்டாய நிலைமை உருவாகியிருந்ததென்பதேயாகும். அதன் கருத்து யாதெனில், 'வெறுமை நிலை' என்பதாக வர்ணிக்கப்படக்கூடியதொரு சூழ்நிலை அங்கு தோற்றுவிக்கப்பட்டிருந்தது. இது பொதுவாக அவநம்பிக்கை தருவதொன்றாகக் கருதப்படமுடிந்தாலும், சற்று ஆழமாகச் சிந்திப்பின், அதுவே நன்னம்பிக்கை தருவதொன்றெனக் கருத இடமுண்டு. ஏனெனில், பிரதேசத்தின் அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் பற்றிய புதிய சிந்தனையை வளர்த்து அதனை உறுதியானதொரு முறையிற் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பினை இது வழங்குகிறதெனலாம். இந்த ஒரு பின்னணியிலேயே, இலங்கையின் வடக்குப் பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்து, அதன் அபிவிருத்தியில் சமூகப்பண்பாட்டுக் காரணிகள் எத்தகைய செல்வாக்கினைச் செலுத்தின என்பதை முடிந்தவரை இனம் கண்டு, அவற்றினது பங்களிப்பின் தன்மை யாது என்பதையும் மதிப்பீடு செய்ய விழைகின்றது.

### மானியகாலச் சமூகமும் அது எதிர்நோக்கிய சவால்களும்

உலகின் ஏனைய பல மானிய கால சமூகங்களைப் போன்றே, இலங்கையின் வடக்குப் பிரதேச, அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணத் தீபகற்பத்தின், ஈழத் தமிழர் சமூகமானது, மரபு ரீதியாகவே தனது பொருளாதார அலுவல்களையும் அவற்றின் முகாமையையும் ஒரு சமூகப்பண்பாட்டு அடிப்படையிலேயே கட்டியெழுப்பியிருந்தது. இந்த அடிப்படையின் முக்கியமான பரிமாணம் அங்கு நிலவியிருந்த சாதி முறைமையாகும். உற்பத்தியானது, ஏறக்குறைய முற்றாகவே, வேளாண்மையையும் மீன்பிடியையும் ஆதாரமாகக் கொண்டதாகவும் சுயதேவைப் பூர்த்தி - செய் நிலையிலும் விளங்கியிருந்தது. இத்தகைய விவசாய சமூகமொன்றின் வாழ்வாதாரத்தைப் பேணுவதாகவே ஏனைய (குடிசைக்) கைத்தொழில்களும் சேவைகளும் வளர்ச்சியடைந்து, நிலவியிருந்த சமூகப்பொருளாதாரக் கட்டமைப்பினை நிறைவு செய்தன. பிரதேசத்தின் பிரதான

தொழில்களாகிய வேளாண்மையும் மீன்பிடியும் அவற்றுக்குத் துணை செய்வனவாகவும் அதற்குப் புறம்பாகவும் இயங்கிய பிற சேவைத் தொழில்களும் அவையவற்றுக்கான குறிப்பிட்ட சாதிகளினாலேயே மேற்கொள்ளப்பட்டன. இவ்வகையில், இந்தக் காலகட்டத்தில் சாதி முறைமை தான், அதன் தனிப்பட்ட ரீதியிலான நன்மை - தீமைகள் எவ்வாறிருப்பினும், வட பிரதேசத்திலான சமூகப்பொருளாதார அமைப்பினைத் தாங்கும் ஒரு தூணாகச் செயற்பட்டதெனின் அது மிகையாகாது.

மானிய காலத்திலிருந்து மத்திய காலத்தினுள் இலங்கை அடியெடுத்து வைக்கும் போது, நாம் மேலே முன்வைத்த சமூகப் பொருளாதார அமைப்பானது இரு வகையான தாக்கங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. அவற்றுள் ஒன்று உலகளாவியதாக ஏறக்குறைய எல்லா நாடுகளையும் பாதிப்பதாயிருக்க, மற்றது, சிறப்பாக இலங்கைக்கும், அது போன்று ஒத்த அநுபவத்தினூடாகச் சென்ற ஏனைய நாடுகளுக்கும் பொருந்துவதாக இருந்தது.

முதலில் பொதுநிலை அநுபவத்தின் நோக்கின், அது பொருளாதாரங்களின் நிரந்தரமான பண்பாகிய, அவற்றின் தொடர்ச்சியான இயங்குநிலை அல்லது மாறுபடும் தன்மை என்பதிலிருந்து ஊற்றெடுக்கின்றது. அதன் தாற்பரியம் என்னவெனில், எந்த ஒரு பொருளாதாரமும் ஒரு கணமேனும் தேங்கி நிற்பதில்லை என்பதேயாகும். நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட வளங்களின் கொள்ளையும் அது சாத்தியப்படுத்தும் அபிவிருத்தி சார் உற்பத்தி முயற்சிகளும் எப்போதும் மாற்ற மடைந்து கொண்டேயிருக்கும். இந்த மாற்றச்செய்முறையின் முக்கியமானதோர் அம்சம் என்னவெனில், (வளங்களும் உற்பத்தி முயற்சிகளும் நேர்க்கணியமாகவே இயங்குகின்றன, அதாவது அதிகரித்துச் செல்லுகின்றன, என்பதாகக் கொள்வோமாயின்), வளங்களின் இரு பிரிவுகளாக நாம் நோக்கிய இயற்கை வளம், மனித வளம் என்ற இரண்டுமே தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளன என்பதேயாகும். நாம் ஏலவே குறிப்பிட்டவாறு, அதிகரிப்புச் செய்முறைக்குட்பட்ட இவையிரண்டும் ஒன்றிணைவது காரணமாகவே உற்பத்தி என்பது சாத்தியமாகின்றது. ஆனால், இந்தச் செய்முறையின் ஓர் அகநிலைப் பண்பு யாதெனில், இயற்கை வளம், மனித வளம் என்ற இரண்டுமே அதிகரித்தாலும், அவற்றின் அதிகரிப்பு வேகத்திற் பெரும் ஏற்றத்தாழ்வுகள் நிலவியிருப்பதாகும். இயற்கை வளங்களுடன் ஒப்பிடும் போது, மனித வளமானது உயர்வானதொரு வேகத்தில் அதிகரித்துச் செல்வதாயிருக்கும். ஆனால், இந்த இரண்டுக்கும் மத்தியிலான இவ்வாறான ஏற்றத்தாழ்வு, உண்மையில், அபிவிருத்தியின் ஒரு சாதகமான பெறுபேறு என்பதாகவே கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் அபிவிருத்தி முயற்சியின் வெற்றி அதிகளவான இயற்கை வளங்களினதும் மனித வளங்களினதும் பாவனையை வேண்டி நிற்கின்றது. ஆனால் அதே நேரத்தில், வெற்றிகரமான அபிவிருத்தி முயற்சி மனித வாழ்வை வளம் படுத்தி மக்கள் தொகையின் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும். அதே அலைவரிசையில், அபிவிருத்தியின் தொடர் வெற்றி, குறிப்பாகத் தொழில்நுட்ப அறிவு விருத்திக்கு இட்டுச் சென்று இயற்கை வளங்களைப் பெருக்குவதற்கும் இடமளிக்குமென வாதிட முடியும். இது உண்மையாயினும், மக்கள் தொகைப் பெருக்கம், இயற்கை வளங்களின் விரிவாக்கம் என்ற இரண்டையும் ஒப்பு நோக்குமிடத்து, பின்னையதன் உயர்வு முன்னையதன் அதிகரிப்பை விட மிகவும் குறைவானதேயாகும். மனித வளங்களின் தொடர்ச்சியான விரிவாக்கம், மனித வளம் அபிவிருத்தியின் ஓர் ஊக்குவிப்புக் காரணி என்ற நிலையிலிருந்து அதனை அபிவிருத்தியின் மீதான ஒரு சுமை என்ற நிலைமைக்கு எடுத்துச் செல்லலாம். அவ்வாறு ஏற்படும் போது, அதனை நாம் ஓர் உற்பத்திக் காரணியாக 'மனித

வளம்' என்று குறிப்பிடாது, உற்பத்தி மீதான ஒரு தடையாக 'சனத்தொகைப் பிரச்சினை' என்றே குறிப்பிடுகின்றோம். எந்தளவுக்கு ஒரு நாடு அல்லது பிரதேசத்திலான வளங்களின் அதிகரிப்பு வேகம் குறைந்தும் அதன் மக்கள் தொகையிலான அதிகரிப்பு வேகம் மிகுந்தும் காணப்படுகின்றதோ, அந்தளவுக்கு அந்த நாடு அல்லது பிரதேசத்தின் அபிவிருத்திப் பிரச்சினை என்பது அதிக கூர்மை பொருந்தியதாயிருக்கும். வளர்முக நாடுகள் பெரும்பாலானவற்றின் அபிவிருத்தி அநுபவம் இவ்வாறானதொரு முறையில் அமைந்ததொன்றேயாகும். எந்த ஒரு குறிப்பிட்ட நாடு அல்லது பிரதேசம் இத்தன்மைத்தான அபிவிருத்தி யதார்த் தத்தினை, அதாவது சனத்தொகைப் பிரச் சினையை, எதிர்கொள்ளுகின்றதோ, அது, இப்பிரச்சினையைச் சிறப்பு நிலையில் அணு குவது பற்றிச் சிந்திக்க வேண்டியதாகின்றது.

ஒரு பொது நிலையில் இலங்கையும், சிறப்பு மட்டத்தில், எமது அக்கறைக்குட்படும் அதன் வடக்குப் பிரதேசமும் மெதுமெதுவாக, ஆனால் உறுதியானதொரு முறையில், சனத்தொகை பற்றிய இவ்வாறானதொரு நிதர்சனத்தை எதிர்கொள்ள வேண்டிய சூழலுக்குள் சென்று கொண்டிருந்தன எனலாம். சாதி முறைமையை ஆதாரமாகக் கொண்ட வடக்கின் பொருளா தாரம் அந்தக் கட்டமைப்புக்குச் சவால் விடும் வகையிலான புரட்சிகரமாறுபாடுகளை இன்னமும் சந்தித்திராத போதும், அதற்கான சாத்தியக்கூறுகள் படிப்படியாக வெளிக்கி ளம்பத் தொடங்கிவிட்டிருந்தனவென்பதை மறுப்பதற்கில்லை. ஏறக்குறைய இதே தருணத்தில் தான் புறநிலையிலிருந்து கிளம்பிய சில தனித்துவமான வளர்ச்சிகளுக்கு இடம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கையுடன் சேர்ந்து வடபிரதேசத்துக்கும் ஏற்படுகின்றது.

இந்த நிலைமை, உண்மையில், உலக நாடுகளின் ஒரு பிரிவு தனது பொருளாதார வளர்ச்சி யின் ஒரு கட்டத்தில் முகம் கொடுக்க நேரிட்ட இயற்கை வளங்களுக்கான நெருக்கடி யிலிருந்து தோற்றம் பெறுவதாயிருந்தது. அவ்வகையில் இது கூட நாம் மேலே விளக்கிய வளங்களுக்கும் அபிவிருத்திக்கும் மத்தியிலான உறவு பற்றிய செல்நெறியின் ஒரு தொடர்ச்சியேயன்றி வேறில்லை. நாடுகள் சிலவற்றில் ஏற்கெனவே இடம் பெற்றிருந்த அபிவிருத்தி மூலமான வாழ்க் கைத்தர உயர்வு, தமது பிரதேசத்தில் மாத்திரம் இடப்படுத்தப்பட்டிருந்த இயற்கை வளங்களையும் மூலவளங்களையும் பயன்படுத்தி உற்பத்தி செய்ய முடியாத சில பொருட்களுக்குக் கேள்வியை ஏற்படுத்திய போது, அத்தகைய வளங்களையும் உற்பத் திகளையும் நாடி அவை உலகின் பிற பிரதேசங்களில் வலை விரிக்க வேண்டியி ருந்தது. இத்தகைய முயற்சிகளின் போது இந்த நாடுகள் இராணுவ பலத்தைப் பிரயோகித்து, அத்தகைய பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ளவும் தவறவில்லை. இந்நாடுகளின் இவ்வாறான சுரண்டலுடன் கூடிய ஆக்கிர மிப்புச் செயற்பாடு தான் காலனித்துவம் என்பதற்கு இடம் கொடுத்து, அதற்குட்பட்ட நாடுகளும் பிரதேசங்களும் குடியேற்ற நாடுகள் என்பதாக அழைக்கப்படும். ஒரு வரலாற்று நிலைமையையும் தோற்றுவித்திருந்தது. மத்திய காலத்தில் போர்த்துக்கல், ஸ்பா னியா, நெதர்லாந்து போன்ற நாடுகளும் நவீன காலத்தில் பிரித்தானியா, பிரான்ஸ் என்பனவும் காலனித்துவத்தின் வழி குடியேற்ற நாடுகளை நிறுவுவதிலும் தாம் கைப்பற்றிய பிரதேசங்களிலான வளங்களைச் சூறையாடுவதிலும் முன்னணியில் நின்றன. வரலாற்றின் இந்த இரு கட்டங் களிலும் இலங்கையும் எமது சிறப்பான கவனத்துக்குரிய அதன் வடக்குப் பிரதேசமும் காலனித்துவத்துக்குட்பட்டு முறையே போர்த்துக்கல், நெதர்லாந்து, பெரிய பிரித்தா னியா ஆகிய மேற்கத்திய வல்லரசுகளின் அரசியற்பொருளாதார அபிலாஷைகளுக்கு

இலக்காகியது மாத்திரமன்றி, அதனுடன் கூடவே, சமூகப்பண்பாட்டுச் செல்வாக்கினுக்கும் உட்பட்டுத்தமது இயல்பு நிலைவளர்ச்சியிலிருந்து விடுபட்ட பாரிய மாற்றங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி நேரிட்டது.

குடியேற்ற நாடுகள் வெறுமனே இயற்கை வளங்களைஉறிஞ்சிக்கொள்வதற்கானபிரதேசங்களாக மாத்திரம் விளங்கியிருக்கவில்லை. தேவைப்பட்டவிடத்து மனித வளங்களும் சுரண்டப்பட்டன. ஆரம்பத்தில் அடிமை முறை அதற்கான வாய்ப்பினை நல்கியது. அடிமை முறை ஆபிரிக்காவின் மனித வளங்களைச் சூறையாடியதென்றால், அது, 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் ஒழிக்கப்பட்டதைத் தொடர்ந்து, விரைந்து அமுலுக்கு வந்திருந்த 'அரைகுறை அடிமை முறை' என்பதாக வர்ணிக்கப்பட்ட ஒப்பந்த ஊழிய முறைமை, இப்போது, இந்திய மனித வளம் பாரிய சுரண்டலுக்கு உள்ளாவதற்கான வாய்ப்பினை வழங்கியது. இவ்வாறான இந்திய ஊழியம் தான் இலங்கையின் பெருந்தோட்டத் துறை வளர்ச்சியடைவதற்கான ஆதாரமாக விளங்கியதென்பது யாவரும் அறிந்த ஓர் உண்மை.

ஆனால் இவ்வாறான மனித வள ஆக்கிரமிப்பானது, அதற்குட்படும் ஊழியத்தை நேரடியாகச் சுரண்டுவதென்பது ஒரு புறமிருக்க, மறைமுகமாகவும், அந்த ஊழியம் பயன்படுத்தப்படும் இடங்களில் வசிக்கின்ற மக்கள் மீது பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தி அவர்களையும் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளிற் சுரண்டிக் கொள்ளத்தலைப்பட்டது. ஏறக்குறைய இலங்கை மக்கள் அனைவரும் அதற்குரிய பலிக்கடாக்களாக ஆக்கப்பட்ட போதும், வட பிரதேசத்தின் பெரும்பான்மையினராகிய ஈழத் தமிழ் மக்கள் இது விடயத்தில் முற்றிலும் மாறுபட்டதொரு சுரண்டலுக்குட்பட்டு அதன்மூலம் தனித்துவம் வாய்ந்ததொரு சமூகப்பண்பாட்டுப் பரிமாணத்துக்கும் இடம் கொடுத்திருந்தமை சிறப்பாகக் கவனிக்கத்தக்கது.

இது விடயத்தில், முதலில் இலங்கையின் அனைத்து மக்களையும் உள்ளடக்கும் பொதுநிலையிலான பாதிப்பை எடுத்துக் கொள்வோம். பெருந்தோட்ட அபிவிருத்தியானது முதல் விளைவுப் பயிர்களின் வேளாண்மை, அதிலிருந்து பெறப்பட்ட பண்டங்களின் கைத்தொழில் ரீதியான பதப்படுத்தல் என்ற இரண்டையும் உள்ளடக்கியவிடத்து, அது, ஏக காலத்தில் விவசாயம், கைத்தொழில் என்ற இரண்டிலும் அநுபவம் பெறக்கூடியதனித்துவமானதொருவாய்ப்பினை முக்கியமாக அதில் ஈடுபடுத்தப்படும் ஊழியப்படைக்கு வழங்குவதாயிருந்தது. ஏற்கெனவே வாழ்வாதார விவசாயத்தில் ஊறிப்போயிருந்த இலங்கைக்குடியான்களுக்கு ஒரு புதிய விவசாய மார்க்கத்தை அறிமுகம் செய்து அவர்களைத் தரம் கூடிய ஒரு விவசாய வர்க்கமாக உயர்த்திவிடுவதற்கான உள்ளார்ந்த தன்மைகள் அனைத்தும் பெருந்தோட்ட விவசாயத்திற் பொதிந்திருந்தனவெனின் அது மிகையாகாது. அதேசமயம், மறுபுறமாக நோக்குமிடத்து, குடிசைக் கைத்தொழில் தவிர்ந்த ஏனைய கைத்தொழில் அலுவல்களில் எதுவித பரிச்சயமும் பெற்றிராத குடியான்களுக்கு உற்பத்திக் கைத்தொழில் என்பதை முதன்முதலாக அறிமுகம் செய்து ஒரு தொழிற்சாலை முறைமைக்கு அவர்களைப் பழக்கப்படுத்துவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பினைப் பெருந்தோட்டப் பண்டங்களின் பதப்படுத்தல் என்பது வழங்கக் கூடியதாயிருந்தது. ஆனால் உள்நாட்டு ஊழியத்துக்குப் பதிலாகத் தென்னிந்திய ஊழியம் பெருந்தோட்ட அலுவல்களில் ஈடுபடுத்தப்பட்ட போது, இந்த விவசாயக் கைத்தொழில்சார் இரட்டை வாய்ப்பு இலங்கைக் குடியான்களுக்கு முற்றாகவே மறுக்கப்படுவதற்கு ஏதுவாயிற்று. இது, உள்ளார்ந்த நிலையில் இலங்கை மக்களுக்குக் கிடைத்திருக்கக் கூடிய வாய்ப்பினைத் தென்னிந்தியத் தொழிலாளர் நோக்கித் திருப்பிவிட்டவிடத்து, இலங்கை மக்கள் ஒரு மறைமுக நிலையிற் பாரிய சுரண்டலுக்

குட்பட்டனரென்பதில் எதுவித ஐயமும் இல்லை. ஆனால் ஈற்றில் இலங்கையர், தென்னிந்தியத் தொழிலாளர் என்ற இரு சாராருமே ஒருமித்த நிலையிற் பலியாகிய ஓர் இரட்டைச் சுரண்டல் தான் இலங்கைப் பெருந்தோட்ட முறைமையின் வரலாற்று எச்சமாகியது.

இனி, வட பிரதேசத்திலான ஈழத் தமிழர் நாம் பேசுமே விளக்கிய பொது நிலை என்பதற் குப் புறம்பாக ஒரு சிறப்பு நிலையிலும் ஆளாகியிருந்த நீண்ட காலச் சுரண்டல் நோக்கி எமது கவனத்தைத் திருப்பலாம். இது எவ்வாறு ஏற்பட்டதென்பதை ஆராயும் பொருட்டு வடக்கின் பொருளாதாரத்தைச் சற்றுப் பின்னோக்கிச் சென்று பார்ப்பது அவசியமாகின்றது.

சாதி முறைமையினை ஆதாரமாகக் கொண்டு சுயதேவைப் பொருளாதாரமாக இயங்கிக் கொண்டிருந்த வடக்கின் யாழ்ப் பாணப் பொருளாதாரமானது அதன் சமூக வளர்ச்சி காரணமாகத் தொடர்ச்சியான மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்படுவதற்கு இடம் கொடுத்திருந்தது. அபிவிருத்தி பொறுத்த இவ்வாறானதொரு நன்னம்பிக்கை தரும் சூாலில் தான் யாழ்ப்பாண இராச்சியம், துரதிர்ஷ்டவசமாக, காலனித்துவப் பொறியினுள் அகப்பட வேண்டியதாகின்றது. *1619* ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் அதனைக் கைப்பற்றிக் கொண்ட போதும் அவர்களைத் தொடர்ந்து *1658* முதல் டச்சுக்காரர் ஆட்சிக் காலத்திலும் ஏற்கெனவே இடம் பெற்றுக் கொண்டிருந்த பொருளாதார வளர்ச்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமாயின், அதிகரித்திருந்த மக்கள் தொகையின் வாழ்வாதாரத்தைப் பேணுவதற்குகந்தவாறு உற்பத்தியைப் பெருக்குவது அவசியமாயிருந்தது. அதனைச் சாதிப்பதற்கு விரிவடைந்திருந்த மனித வளத்துடன் இணைப்பதற்குக் கூடியளவான இயற்கை வளங்களைத் தயார்ப்படுத்துவது அவசியமாயிருந்தது. இவ்வாறானதொரு தேவை *1796* ஆம் ஆண்டு பிரித்தானியர் டச்சுக்காரரிடமிருந்து இலங்கையின் (கண்டி தவிர்ந்த) ஏனைய பகுதிகளுடன் சேர்த்து வடக்கையும் கைப்பற்றிக் கொண்ட போது மிகுந்த அவசரமானதொன்றாக மாறியிருந்ததெனலாம். ஆனால், ஆட்சியாளர் என்ற வகையில் இந்த மூன்று வல்லரசுகளில் ஒன்று தானும் இவ்வாறானதொரு கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கவில்லை. வட பகுதியிலும் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலுமான இயற்கை வளங்களை முதற்கண் தரம் பிரித்து மதிப்பீடு செய்து, அதன் பின்பு உரியவாறு பேணித் தயார்ப்படுத்தி, ஈற்றில், அவற்றை அதிகரித்துக் கொண்டிருந்த மனித வளத்துடன் ஒருங்கிணைத்து உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அத்தியாவசியமானதாயிருந்தது. ஆனால், இவை எதுவுமே வடக்கில் நடைபெறவில்லை என்பது தான் யதார்த்தம்.

அதற்குப் பதிலாக வடக்கிலான வளங்கள் பற்றிய தவறான மதிப்பீடு தோன்றியிருந்தது மாத்திரமன்றி, அதுவே படிப்படியாக ஊறி உறுதி பெறும் ஒரு செய்முறையும் இடம்பெறுவதாயிற்று. அதாவது, வடக்கு செழிப்பற்ற நிலங்களையும் குறைவான மழை வீழ்ச்சியையும் கொண்ட ஒரு வரண்ட பூமி; அதனால் அபிவிருத்திக்குதவக் கூடிய வளங்கள் என்று அங்கு பெரிதாக எதுவும் இல்லை; அதற்குப் பதிலாக, இவ்வாறான வளங்களுக்கு வடக்கில் கூர்மையானதொரு தட்டுப்பாடு நிலவுகின்றது; என்பது போன்ற கருத்துக்கள் பிரபல்யம் பெறுவதாயின. இவ்வாறான தப்பபிப்பிராயங்கள் இன்றுவரை பெருமளவுக்கு நீடித்திருந்து, இலங்கையின் தற்போதைய ஜனாதிபதியே வடக்கு மாத்திரமன்றி கிழக்கும் கூட வரட்சியானதென்ற தொனிப்பட "இந்தப் பகுதியிலுள்ள வரட்சியான காலநிலை காரணமாகவா அபிவிருத்தி குறைவாக உள்ளது..." என்பதாகக் கேள்வி எழுப்பியுள்ளார். (வீரகேசரி, ஜுலை *11*, *2016*). ஆனால், உலகளாவிய நிலையில் இயற்கை வளங்கள் என்பன எவ்வகையிலும் சீரான பரம்பல்

தன்மை கொண்டவையன்று என்பதும், அதற்கு முற்றிலும் மாறாக, அவை பாரிய அளவிலான சமச்சீரற்ற ஒரு முறையில் தான் உலகெங்கும் பரந்துபட்டுக் கிடக் ்ன்றன என்பதும் தான் நிதர்சமான உண்மைகள். எனவே, எந்த ஒரு நாடும் அல்லது அதனுள்ளான எந்தவொரு பிரதேசமும் இயற்கை நல்கியுள்ள வளங்களின் கொடையை ஆதாரமாகக் கொண்டு, அந்த ஒரு வரையறையினுள் நின்று தான் தனது அபிவிருத்தித் தந்திரத்தை வகுத்து, அதற்கு அமைவான அபிவிருத்தி முயற்சிகளையும் முன்னெடுக்க வேண்டும். தனிப்பட்ட முயற்சியாளரிடம் உற்பத்திக்கான பொறுப்பு விடப்படுமாயின், அதனை ஊக்குவிக்கும் வகையிலான உகந்த கொள்கைகளை வகுத்து அவற்றுக்கேற்பச் செயலாற்றுவது தான் ஆட்சி புரியும் அரசாங்கத்தின் கடப்பாடாகின்றது. ஆனால் காலனித்துவ அரசாங்கங்கள் அவ்வாறு செய்ய முன்வரவில்லை. இந்த வல்லரசுகளின் பொருளாதார அபிலாஷைகளுக்கும் குறிக் கோள்களுக்கும் வடக்கிலிருந்த வளங்கள் ஈடுகொடுக்க முடியாதிருந்தவிடத்து, அவற்றை எந்த வகையிலும் பயன்படுத்தாமல் விடுவதற் கான ஒரு சுலபமான சாக்காகவே பிரதேசம் வரட்சியானது செழிப்பற்றது என் பதான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன எனலாம்.

இவ்வாறு இயற்கை வளங்களைப் பயன் பாட்டுக்குட்படுத்தாது அவற்றைத் தரிசாக விட்டுவிட்டதும் அதன் மூலமான மோசமான பாதிப்பு, உண்மையில், மனித வளங்களின் மீது தான் ஏற்பட்டிருந்ததெனலாம். ஏற்கெ னவே இடம்பெற்றிருந்த அபிவிருத்தியின் சாதகமானதொரு வெளிப்பாடாக மக்கள் எண்ணிக்கை அதிகரித்தவிடத்து அதற்கு ஒத்திசைவான ஒரு முறையில் மேலதிக மக்களை உறிஞ்சக் கூடியவாறு தொழில் வாய்ப்புக்கள் பெருகவில்லை. அதன் மூலம் தலைகாட்டியிருந்த வேலையின்மை என்பது, ஒரு வகையில், யாழ்ப்பாணப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை புதியதோர் அநுபவம் என்றே கூற வேண்டும். ஏனெனில், அறுதியிட்டுக் கூறமுடியாவிட்டாலும், ஏறக்குறையப் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் முதல் மூன்று தசாப்தங்கள் வரை, அபிவிருத்தியும் மக்கள் தொகைப் பெருக்கமும், ஆங்காங்கே ஏற்பட்ட சில அமுத்தங்களின் மத்தியிலும், ஒன்றுக்கொன்று ஒத்திசைவானதொரு முறையில்தான் வளர்ந்து சென்றிருந்தனவென்று கொள்ளலாம். மக்கள் செய்வதற்கு எதுவுமின்றிச் சோம்பியிருந்தனரென்பதற்கான ஆதாரங்கள் எதுவும் பெரிதாக இல்லை. ஆகவே, அதன் கருத்து யாதெனில், நிலவியிருந்த இயற்கை வளங்களுடன் விரிவடைந்து கொண்டிருந்த மனித வளங்களை இணைப்பதென்பது இன்னமும் பாரிய நெருக்கடி எதற்கும் உட்பட வில்லை என்பதேயாகும். ஆனால், 1830கள் அளவில், இந்த நிலைமை மிக விரைவாகவே மாறுபாடடைய முற்பட்டிருந்ததெனலாம். மக்கள், இதுவரையில்லாதவாறு, உற்பத்திக்கான தமது பங்களிப்பை வழங்குவதற்கான வாய்ப்புக்களில் ஒரு பற்றாக்குறை நிலைமை யினை எதிர்கொள்ளலாயினர். அதாவது, வேலையின்மை என்பது அவர்களை எதிர்கொள் ளத்தலைப்பட்டிருந்தது.

எனினும், இதிலிருந்து விடுபடக்கூடிய மாற்று வாய்ப்பொன்றினைப் பெறக்கூடியவாறு யாழ்ப்பாணப் பொருளாதாரத்துக்கு வெளியே இலங்கைப் பொருளாதாரத்திற் சில மாறுபாடுகள் நிகழத் தொடங்கியிருந்தன. உண்மையில், இத்தகைய வாய்ப்பொன்று தோன்றியிராவிடின், யாழ்ப்பாண மக்கள் தம்மைச் சீண்டியிருந்த பிரச்சினைகளுக்கு எவ்வாறு முகம் கொடுத்திருப்பரென்பது பலவகை ஊகங்களுக்கும் இடமளிக்கக் கூடியதொரு வினாவாகும். அத்தகைய ஊகங் களுள் ஒன்றாக, 1980களில் தீவிரவாதத்துடன் தொடர்புடையதொன்றாக உருவாகியிருந்த

நிலைமை 1830களிலேயே ஏற்பட்டிருக்குமா என்ற சிந்தனை மிகத் தீவிரமானதொன்றாகத் தெரிந்தாலும் முற்றிலும் அர்த்தமற்றது என்று எவ்வகையிலும் ஒதுக்கிவிட முடியாது.

**மாற்று வாய்ப்புகளின் பொருளியல்**

எவ்வாறாயினும், வட பகுதி மக்கள் பயன் படுத்தக்கூடிய ஒரு முறையில் தோன்றி யிருந்த வருமானம் உழைப்பதற்கான மாற்று வாய்ப்புக்கள், ஒரு புறம், இலங்கை அரசியற் பொருளாதாரத்தின் முக்கியமான ஒரு தேவையை நிறைவேற்றுவதாக இருந்தாலும், மறுபுறம், அவர்கள் வாழ்க்கையில் சமூ கப்பண்பாட்டு ரீதியாக முற்றிலும் புதிய பரிமாணமொன்றை அறிமுகம் செய்வன வாயிருந்தன. அதற்கான ஆரம்பத்தை 1833 ஆம் ஆண்டின் கோல்புறுக் சீர்திருத்தங்கள் ஏற்படுத்திக் கொடுத்தன எனலாம்.

ஒரு குடியேற்ற நாடு என்ற வகையில் இலங்கைத் தீவானது தனது வரவை மீறிய வகையிற் செலவுகளை மேற்கொண்டிருந்த போது அதனைத் தடுப்பதற்கான வழிவகை களைக் கண்டறியுமாறு அனுப்பப்பட்ட கோல்புறூக் குழு இந்நிலைமையினை ஒரு குறுகிய காலப் பிரச்சினையாகப் பார்க்காது, ஒரு நீண்டகாலப் பிரச்சினையாக அணுகி, மிக அடிப்படைத் தன்மை வாய்ந்த அரசியற் பொருளாதாரத் தீர்வுகள் பலவற்றை முன்வைத் திருந்திருந்தது. அவற்றின் பெறுபேறுகள் மூலமான பிணைப்புகளை நாம் இன்னமும் அறுத்தெறிய முடியவில்லை என்பது ஒரு புறமிருக்க, நாட்டின் நிர்வாகத்திற் சிக்கனத் தைக் கொண்டு வரும் வகையில், அரச பணித்துறையின் நடுமட்டப் பதவிகளுக்கு ஆங்கிலேயருக்குப் பதிலாக இலங்கையர் அமர்த்தப்பட வேண்டுமென்று கோல்புறூக் குழு பரிந்துரை செய்தது. இது தான் வட பகுதி மக்களுக்கான ஒரு பொருளாதார வாய்ப்பாக அமைந்து, நடுமட்டப் பதவிகளின் பெரும் பங்கினை அவர்கள் தமக்கென ஈர்த்துக் கொள்வதற்கு வகை செய்தது. அதற்கு ஆங்கில மொழியிலான அறிவு ஒரு முன்கூட்டிய தேவையாக இருந்துவிடத்து, அதனை ஏற் கெனவே யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆன்மிகப் பணியில் ஈடுபட்டிருந்த கிறிஸ்தவ மிஷனரிகள் நிறுவியிருந்த பாடசாலைகள் போதியளவு வழங்கிக் கொண்டிருந்தன. ஆகவே சமூக மட்டத்தில், மேற்கத்திய கலாசாரத்துடன் இணைந்திருந்த கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்கான முயற்சிகளும், அதன் ஒரு பகுதியாக, ஆங்கில மொழியிலான அறிவு விருத்தியடைந்தமையும் தான் ஒரு மாற்றுப் பொருளாதார வாய்ப்பாக அரச பணித்துறைப் பதவிகளை யாழ்ப்பாணத்தின் ஈழத்தமிழர் ஆக்கிரமித்துக் கொள்வதற்கு வகை செய்தது.

ஒரு புறம், (கிறிஸ்தவ) மதம் சார் கல்வி வட பகுதி மக்களுக்குக் கை கொடுத்துப் பணித்துறைப் பதவிகளுக்கான ஊடகமாகச் செயற்படுவதன் மூலம் சமூகப்பண்பாட்டுப் பரிமாணமொன்றை ஈந்திருந்ததென்றால், மறு புறம், யாழ் குடாநாட்டின் சமூக அமைப்பில் நடுத்தர வர்க்கமொன்றின் எழுச்சியை இந்தச் செய்முறை சாத்தியமாக்கியிருந்தது. அதன் மூலம் ஈழத் தமிழர் மத்தியிற் சாதி அடிப்படையிலான பாகுபாடு என்பது எவ்வகையிலும் அழிக்கப்படாத போதும், முதன்முதலாக வர்க்க அடிப்படையிலான ஒரு பாகுபாட்டைப் புகுத்துவதற்கு இது வகை செய்திருந்தது. அதன் வழி, சாதி தான் பொருளாதார அலுவல்களுக்கான, அதுவும் குறிப்பாகச் சேவைத் தொழில்களுக்கான, அடிப்படை எனபது ஊடறுக்கப்பட்டு, அரசாங்க சேவையிலுள்ள அனைவரும் ஒரு வர்க்கம் என்ற உணர்வு படிப்படியாக மேலோங்குவதாயிற்று. ஆகவே, இது 'சாதியி ன்றித் தொழில் இல்லை' என்ற நிலைமையை ஊடறுத்துச் சாதி முறைமை ஈழத் தமிழர் மத்தியிற் பலவீனமடைவதைத் தொடக்கி வைத்திருந்ததெனின் அது மிகையாகாது.

ஓர் அடிப்படை நிலையிலிருந்து ஊற் றெடுத்த மேற்கூறிய மாறுபாட்டுக்குப் புறம்பாக, அரச பணித்துறை என்பது தொழில்

வாய்ப்புக்கான ஒரு சாதனமாகச் செயற்பட்டமை மூலம் வட பகுதி மக்களின் சமூக வாழ்க்கையில் அதன் பக்க விளைவு எனக் கூறத்தக்க வேறு பல மாற்றங்களுக்கும் இடம் கொடுக்கப்பட்டிருந்தது. அவற்றுள் முதலாவதாகக் குறிப்பிடக்கூடியது அவர்களுடைய தனிமை நிலை முறியடிக்கப்பட்டமையாகும். பணித்துறைப் பதவிகள் உடனடியாக நாட்டின் தலைநகராகிய கொழும்பிலும் நாளடைவில் கோல்புறுக் சீர்திருத்தங்களின் கீழ் உருவாக்கப்பட்டிருந்த ஐந்து மாகாணங்களின் தலைநகர்களிலும் தான் இடப்படுத்தப்பட்டமையினால், தமிழ் மக்கள் வட பகுதியிலான தமது கிராமிய வசிப்பிடங்களிலிருந்து வெளியேறி முக்கியமாகக் கொழும்பிலும், அது தவிர்ந்த ஏனைய பிரதான (மாகாண) நகரங்களிலும் வசிக்க வேண்டியதாயிற்று. அவ்வாறு சென்றவிடத்து, அவர்களிற் பெரும்பாலானோர் தமது குடும்பங்களை விட்டுத் தனியாகச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. அக்கட்டத்தில் ஆண்களே இவ்வாறான அசைவுச் செய்முறைக்குட்பட்டதால், அவர்களின் இடப்பெயர்வுடன் குடும்பத் தலைவியர் தத்தம் குடும்பங்களைப் பொறுப்புடன் தனியாகவே நிர்வகிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தையும் கூடவே ஏற்படுத்தியிருந்தது. பெண்கள் மீதான இத்தகைய சுமை, அவர்கள் சுயமாகவே சிந்தித்துச் செயற்படுவதற்கு வேண்டியிருந்த அறிவு, ஆற்றல், திறமை, சுதந்திரம் என்பவற்றை அவர்களுக்கு நாளடைவில் வழங்குவதாயிருந்தது. நடைமுறையில் இவற்றை அவர்கள் செயற்படுத்துவதற்கும் அவர்களுடைய வாழ்வாதாரத்துக்கும் வேண்டியிருந்த நிதி அரசபணி புரிந்த குடும்பத் தலைவர்களிடமிருந்தே வர வேண்டியிருந்த போது, அதற்கான முக்கிய சாதனமாக அஞ்சல் மூலமான காசுக் கட்டளைகளே விளங்கியிருந்தன. அதுவே யாழ்ப்பாணப் பொருளாதாரம் ஒரு காசுக் கட்டளைப் பொருளாதாரம் என்று வர்ணிக்கப்படுவதற்கும் ஏதுவாயிற்று.

மேற்கூறிய சமூகப்பொருளாதார மாற்றங்களுடன் சேர்ந்ததாக இடம் பெற்றிருந்த பிறிதொரு வளர்ச்சி, அரச பணித் துறைச் சேவைக்காகச் சென்றவர்களுடன் கூடவே, சுயமான தொழில் வாய்ப்புகளைத் தேடிச் சென்றவர்களும் உள்ளடங்கியிருந்தமையாகும். இத்தகைய சுய-வாய்ப்புக்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது சில்லறை வர்த்தகமாகும். கொழும்பு உட்பட்ட பிரதான மாகாண நகர்களில் வட பகுதி மக்களால் திறக்கப்பட்ட சில்லறை வர்த்தக நிலையங்கள் தமிழ்ப் பணித்துறை ஊழியரையும் இந்நகரங்களின் பிற மக்களையும் வாடிக்கையாளராகக் கொண்டு சிறந்த சேவை புரிந்தன எனலாம். இவ்வாறு ஆரம்பித்த சில்லறை வர்த்தகர் பலர். மொத்த வர்த்தகராகத் தரம் உயர்ந்து வட பகுதி மாத்திரமன்றி நாடு முழுவதி லுமான மூலதன ஆக்கத்துக்குப் பாரிய பங் களிப்புச் செய்ய முடிந்தது. இதுவும் சாதி முறைமையை ஆதாரமாகக் கொண்ட யாழ்ப்பாணப் பொருளாதாரத்தின் இயல்பினை, நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட அரச சேவை ஊழியத்துடன் சேர்ந்து, பலவீனப்படுத்துவதில் பேருதவி புரிவதாயிருந்தது. அரச பணித் துறை ஊழியர்க ஒரு நடுத்தர வர்க்கமாக வளர்ச்சியடைந்தனரென்றால், வர்த்தக அலுவல்களில் ஈடுபட்டவர்களில் ஒரு பகுதியினராவது முதலாளிகளாகத் தரம் உயர்ந்து ஈழத்தமிழர் மத்தியில் முதலாளி வர்க்கமொன்று தோன்றுவதற்குத் துணை புரிந்திருந்தனர். ஆனால், இந்த முதலாளிகள் திரட்டியிருந்த மூலதனம் ஒரு மூலதனப் பரவலாக்கத்திற்கும் அதன் வழி புதிய முதலீடுகளுக்கும் அவற்றின் அடிப்படையிலான அபிவிருத்திக்கும் வழி சமைத்ததென்று கூறுவது கடினம். அதன் கணிசமான ஒரு பகுதி, உண்மையில், சமய அலுவல்களில், அதுவும் குறிப்பாக ஆலய நிர்மாணப் பணிகளில் தான், முடக்கப்பட்டதெனலாம்.

**மாற்றுத் தொழில்வாய்ப்புகள் : எதிர்த் தாக்குதல்களும் அகநிலை விளைவு களும்**

நாம் மேலே சுட்டியவை, வடபகுதி மக்கள் எதிர்கொண்ட மாற்றுத்தொழில்

வாய்ப்பிலிருந்து ஊற்றெடுத்த நேர்க்கணியமான, குறுகியகால நன்மைகள் என்பதாக வர்ணிக்கப்படலாம். ஆனால், இந்த மாற்றங்களின் நீண்ட கால விளைவுகளை நோக்கின், அவற்றிற் பலவும் ஈழத் தமிழ் மக் களை ஓர் எதிர்க்கணிய நிலையிற் பாரதூரமாகப் பாதிக்கமுற்பட்டதைக் காணலாம். இத்தகைய பாதிப்புக்களுக்கான அடிப்படைக் காரணம் அரசாங்க சேவை வடிவில் ஈழத் தமிழர் பெற்றுக் கொண்ட தொழில் வாய்ப்புக்களின் பெரும் பகுதி ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரை அவர்களுக்கான ஒரு தனியுரிமையாக நீடித்திருந்தமையேயாகும்.

முதலில், இது, ஈழத் தமிழர் மத்தியிற் சில வகைத் தவறான அல்லது தப்பான அபிப்பிராயங்களுக்கு இடம் கொடுத்திருந்தமை குறிப்பிடப்பட வேண்டும். கல்வியில், அதுவும் ஆங்கிலக் கல்வியில், தாம் தலைசிறந்தவர்கள், கணிதத்தில் விற்பன்னர்கள், விஞ்ஞானக் கல்வியில் தம்மை விஞ்சிவிட முடியாது என்பது போன்ற இறுமாப்பான சில வகை எண்ணங்கள் அவர்கள் மத்தியிற் பரவி ஒரு தற்பெருமை கொண்ட இனமாக அவர்களை மாற்றிவிட்டிருந்தது. இவ்வாறான எண்ணங்கள் ஒரு சாதாரண சூழலில் அதிக தீங்கிழைக்காத போதும், அரசியற் பொருளாதார நிலைமைகள் அவர்களுக்குப் பாதகமான ஒரு முறையில் வளர்ச்சியடைந்த போது, அந்த வளர்ச்சியின் தீவிரத் தன்மையை கூர்மையடையச் செய்வதில் அவை பெருமளவு பங்களிப்புச் செய்தன. ஆனால், இது விடயத்திலான யதார்த்தம் யாதெனில், ஈழத் தமிழர் தமது வாழ்வாதாரத்துக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்ட ஒரு தறுவாயில், அரச பணித்துறைப் பதவிகளுக்குத் திடீரென உண்டாகியிருந்த கேள்வியை நன்கு பயன்படுத்தக்கூடிய தகைமையை ஆங்கிலக் கல்வி வாயிலாகப் பெற்றிருந்த காரணத்தினால், தமக்கான வாய்ப்புக்களை வெற்றியாகப் பெயர்ப்பது அவர்களைப் பொறுத்தவரை ஓர் ஒப்பீட்டு ரீதியிற் சுலபமாகவே சாத்தியமாயிற்று என்பதேயாகும். அதற்கு மேலாக, சிறப்பான தகைமைகள் சில இயல்பாகவே அவர்களிடம் பொதிந்திருந்ததென்பதில் எதுவித உண்மையும் இல்லை.

ஈழத் தமிழர் அரச பதவிகள் விடயத்தில் அநுபவித்த தனியுரிமை நிலை, மறுபுறமாக, இலங்கையின் பெரும்பான்மை இனமாகிய சிங்கள மக்களைப் பாதகமான ஒரு முறையிற் பாதிப்பதைத் தடுக்க முடியவில்லை. வடக்கு போன்றே தெற்கிலும் விரிவடைந்து கொண்டிருந்த மனித வளத்தைப் பூரணமாக அபிவிருத்திச் செய்முறையினுள் உறிஞ்சமுடியாத ஒரு நிலை விரைந்து தோற்றுவிக்கப்பட்டதும், வேலையின்மை என்பது ஒரு முக்கிய பிரச்சினையாக உறுதியான ஒரு முறையில் வெளிப்படுவதாயிற்று. இந்நிலையில், ஈழத்தமிழர் அரசாங்க சேவையிலான பதவிகளை ஆக்கிரமித்திருந்தமை சிங்கள மக்களின் கண்களை உறுத்தியதில் ஆச்சரியமில்லை. **1948** ஆம் ஆண்டு பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து இலங்கை தன்னை விடுவித்துக் கொண்டதும், ஆட்சி பீடமேறிய ஒவ்வொரு அரசும், தவிர்க்க முடியாத வகையில் சிங்கள இனப் பெரும்பான்மையைத் தான் கொண்டிருந்தது. இந்நிலையில், ஆரம்பத்திலிருந்தே அவற்றின் முக்கிய குறிக்கோள் தமிழ் மக்கள் அரசாங்க சேவையிற் கொண்டிருந்த செல்வாக்கினை முறியடிப்பதாகவும் அவர்கள் இது விடயத்தில் அநுபவித்த நன்மைகளைச் சிங்கள மக்கள் நோக்கித் திருப்பிவிடுவதாகவும் தான் இருந்தது.

இந்த வகையில், **1956** ஆம் ஆண்டின் சிங்கள அரசகரும மொழிச் சட்டம் சிங்கள அரசாங்கங்களின் நோக்கத்தை நிறைவு செய்வதற்கான ஓர் அடிப்படை முயற்சியாகச் செயற்பட்டிருந்தது. இது நடுத்தர மட்டத்திலான அரச பணித் துறைப் பதவிகளைத் தமிழ் மக்களிடமிருந்து சிங்கள மக்கள் நோக்கித் திருப்பி விடுவதாயிருந்தது. ஆனால், தமிழ் மக்கள் இன்னமும் மாற்றுத் தொழில் வாய்ப்புகள் இல்லாத ஓர் இக்கட்டு நிலையிலேயே தொடர்ந்தும் இருந்ததால், அரசாங்க அணுகுமுறையினால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர் தமது தேடலை

மேனோக்கி நகர்த்திச் சிங்கள மக்களின் போட்டி குறைவாயிருந்த வாழ்க்கைத்தொழிற் பதவிகளைக் குறி வைக்கலாயினர். ஆனால் 1971 ஆம் ஆண்டின் தரப்படுத்தற் சட்டம் அதற்கும்ஆப்பு வைத்,ு போது, தமிழ் இளைஞர் நிலைமை மிக மோசமாயிற்று எனினும் ஆங்கில மொழி மூலமான கல்வி, விஞ்ஞானக் கல்வி என்பவற்றுக்கு அதீத முக்கியத்துவம் கொடுத்து, அவற்றை ஆதாரமாகக் கொண்டு தொழில் வாய்ப்புக்களைத் தேடும் ஒரு மனப்பாங்கிலிருந்து அத்துணை இலகுவில் அவர்களால் விடுபட முடியவில்லை. அந்தள வுக்கு ஒரு புறம் அ.பிவிருத்தியின்மையும், மறுபுறம், ஆட்சி புரியும் சிங்களப் பெரு ம்பான்மை அரசுகளின் இனத்துவ ரீதியி லான பாரபட்சமான கொள்கைமட்ட அணுகு முறையும் தமிழ் மக்களை ஒட்டுமொத் தமாகத் தொழில்வாய்ப்பு விடயத்தில் ஒரு வங்குரோத்து நிலைமைக்கே தள்ளி விட் டிருந்தது.

இது, ஈழத் தமிழர் சமூகப் பண்பாட்டு மட்டத்தில் இரு பிரதான விளைவுகளுக்கு இடமளித்திருந்ததெனலாம். அவற்றுள் ஒன்று உள்நோக்கிய பரிமாணமாக வெளிப்பட, மற்றது, வெளிநோக்கிய வளர்ச்சியாக விளங் கியது. உள்நோக்கிய நிலையில், தரப்பட்ட சூழலில்தாம் வெற்றியடைவதற்கு ஒரு தனிநபர் என்ற வகையில் தமிழ் இளைஞர் மாத்திரமன்றி அவர்தம் பெற்றோரும் இணைந்ததாக எதனை எல்லாம் செய்ய முடியுமோ அதனை எல்லாம் மிகுந்த அர்ப்பணிப்புடன் செய்யத் தலைப்பட்டனரெனலாம். எல்லாருமே தத்தம் தனிநபர் மட்டத்தில் இவ்வாறு செயற்பட முற்பட்டவிடத்து, அது இளைஞர் சமூகத்தில் ஒரு கூரிய அகநிலைப் போட்டிக்கு இடமளித்தி ருந்தது. தகுந்த கல்வியறிவும் உயர்வான சித்தியும் தான் இத்தகைய போட்டியின் பிரதான அஸ்திரங்களாக இருந்தவிடத்து, ஈழத் தமிழர் கல்வியில், அதுவும் குறிப்பாகக் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புக் கல்வியில், அரசின் கொள்கைமட்டத் தலையீடு எதுவுமின்றியே பாரிய மாற்றங்களுக்கு இடம் கொடுக்கப்பட்டிருந்தது. அவற்றுள் முக்கியமானது, பாடசாலைகளின் பங்களிப்பில் ஏற்பட்ட நம்பிக்கையீனமும் அதனைத் தனியார் முயற்சி மூலமான கல்வியிலான அதீத நம்பிக்கை கொண்டு ஈடு செய்ய முயன் றமையும் ஆகும். அதன் விளைவாகவே தனி யார் கல்வி நிறுவனங்கள் தமிழர் - வாழ் பிரதேசங்களின் மூலை முடுக்குகளிலெல்லாம் புற்றீசல் போலக் கிளம்பியிருந்தன. அவை வாழ்க்கைத் தொழில்சார் பாடநெறிகளுக்கு நாட்டின் பல்கலைக்கழகங்களில் மிக மட்டுப்படுத்தப்பட்டதாக நிலவியிருந்த வாய்ப்புக்களுக்கு முண்டியடிப்பதற்கான போட்டிக் களங்களாகச் செயற்பட முற்பட்டி ருந்தன. இத்தகைய வாய்ப்புகளுக்கு மரபு ரீதியாகக் களம் அமைத்துக் கொடுத்துக் கொண்டிருந்த பாடசாலைகள் பெறுமதி குறைக்கப்பட்டு வெறும் பெயரளவிலான ஒரு நிறுவனவடிவிலான அடையாளத்தை மாத்திரம் மாணவருக்கு வா;ங்கிக் கொண்டிருந்தன.

தமிழ் இளைஞரின் வெளிநோக்கிய பரிமாண எதிர்த்தாக்குதலாகத் தோன்றியி ருந்தது புலப்பெயர்வு என்பதாகும். ஒரு நாட்டிலிருந்து புலம் பெயர்வதென்பது அதற் கான கணிசமான நிதி வசதி, புலம்பெயர் நாட்டில் ஏற்படுத்தக் கூடிய சரியானதும் பொருத்தமானதுமான தொடர்பு போன்ற இன்னோரன்ன முன்கூட்டிய தேவைகளை உள்ளடக்கியதாகும். புலப்பெயர்வு என்பது பாரிய அலைகளாக ஏற்படும் பேரளவு அசைவு, உண்மையில், தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் 1983 க்குப் பிந்திய காலகட்டத்தில் தான் ஏற்படுகின்றது. ஆனால், அதற்குக் கட்டியம் கூறும் வகையில், தமிழ் இளைஞர் உயர் கல்வியும் வேலை வாய்ப்புகளும் சவாலுக்குட்பட்ட 1970களின் நடுப்பகுதியளவிலிருந்தே புலம்பெயர் செல் நெறி ஆரம்பித்துவிட்டிருப்பதைக் காணலாம். 1980களிலான பிந்திய கட்டப் புலப்பெயர்வு உயிர் பிழைத்திருப்பதற்கான அச்சுறுத்தலின் மத்தியில் ஏற்பட்டவிடத்து, அதற்கான முன் கூட்டிய தேவைகள் பற்றிய பூரண திருப்தி நிலவாத நிலையிலும் பெருமளவுக்குத்

திட்டமிடப்படாததொன்றாகவும் தான் ஏற்படு வதாயிருந்தது. எனினும், கல்வி, வேலை வாய்ப்பு என்பவை கருதி இடம்பெற்ற ஆரம்ப காலப் புலப்பெயர்வு சரியான குறிக்கோளுடன், ஓரளவுக்காவது திட்டமிடப்பட்டு, அதற்கான முன்கூட்டிய தேவைகள் சரியான முறையிற் பூர்த்தி செய்யப்படும் ஒரு சூழ்நிலையில் தான் இடம்பெற்றதெனலாம். அதற்கு முன்னதாகவே 1956 ஆம் ஆண்டு சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒரு சிற்றலை எனத்தக்க புலம் பெயர்வு இடம்பெற்றமையும் குறிப்பிடத் தக்கது. இது சிங்கள மொழியில் தொழில் புரிவதை எதிர்த்து அல்லது அது தம்மால் இயலாதது என்று கருதிய சாராரால் மேற் கொள்ளப்படுவதாயிருந்தது. ஆகவே, இது வயதில் இளையவர்களாலன்றி, வயதிலும் அநுபவத்திலும், ஒப்பீட்டு ரீதியாக, முதிர்ந்த ஒரு பிரிவினரால் செயற்படுத்தப்பட்டதாயிருந்தது. எவ்வாறாயினும், தமிழ் இளைஞர் மீது இதனை அடுத்து வந்த காலங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் தான் வெளிநாடுகள் நோக்கிய புலப் பெயர்வு என்பதை ஈழத் தமிழர பரிமாணங்களுள் ஒன்றா கத் தரம் உயர்த்தியதெனலாம்.

**நடப்பு நிலை அபிவிருத்தி முயற்சிகள்**

வட பிரதேச மக்கள் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலம் வரை அரச சேவைப் பதவிகள் வழி அநுபவித்துக் கொண்டிருந்த சலுகை நிலையை முக்கியமானதொரு முறையில் குறி வைத்து ஆட்சி பீடத்திலிருந்த அரசாங்கங்களினால் ஆரம்பிக்கப்பட்ட இனத்துவச் செயற்பாடுகள், அவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தவர்கள் மாத்திரமன்றி, அதனை ஆரம்பித்த சாரா ரையும் விட்டுவைக்காத வகையில் ஓர் இனத் துவ யுத்தமாக வெடித்துப் பாரதூரமான விளைவுகளுக்கு இடம் கொடுத்ததென்பதும் அது எவ்வாறு முடிவுக்கு வந்ததென்பதும் இலங்கையின் கிட்டிய கால வரலாறு. இந்த ஒரு பின்னணியில் தான் வட பிரதேச அபிவிருத்தி பற்றிப் புதிதாகச் சிந்திப்பதற்கான ஒரு வாய்ப்புக் கிடைத்திருப்பதாக உரையின் ஆரம்பத்திற் குறிப்பிட்டோம்.

ஆனால் இவ்வாறு அபிவிருத்தி பற்றிச் சிந்திக்கும் ஒரு தறுவாயில் வடக்கின் அபிவி ருத்தி கருதி ஏற்கெனவே பலதரப்பட்ட முயற் சிகள் தொடக்கி வைக்கப்பட்டிருப்பதும் நாம் உள்வாங்க வேண்டியதொன்றாகும். அவற்றுள்ளான நடப்பு நிலை ஏற்பாடு தான் பொருண்மிய மத்திய நிலையமொன்றை நிறுவு வதற்கென ஒரு தொகை நிதி ஒதுக்கீட்டுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கும் தீர்மானமாகும். அதனை வடக்கில் எங்கு நிறுவுவது என்பது பற்றி நீடித்திருந்த சர்ச்சை ஒருவாறு தற்போது முடிவுக்கு வந்துள்ளதெனலாம். இது தவிர, அபிவிருத்தி நோக்கிய முயற்சிகளாகச் சுற்றுலாத் துறையிலான வளர்ச்சிகளும் வடபகுதியிற் கீழ்க்கட்டுமானமொன்றை நிர்மாணிக்கும் வகையில் இடம்பெற்றுள்ள போக்குவரத்திலும் பொதுத்தொடர்பிலுமான முன்னேற்றங்களும் குறிப்பிடப்படலாம். எனினும், கீழ்க் கட்டுமான விடயத்திற் சிறப்பாகக் கருத் திலெடுக்கப்பட வேண்டிய தொரு எழுவினா யாதெனில், அதன் வளர்ச்சி தெளிவானதொரு சமூகப்பொருளாதாரத் திட்டத்துக்கு ஒத்திசைவானதொன்றாக மேற்கொள்ளப்படுவது தான் சிறந்த தென்ப துடன் அதிலிருந்து உச்சநிலைப் பயன் பெறுவதையும் உத்தரவாதப்படுத்துவதாக இருக்கும். ஆனால் இவ்வாறு வடக்கின் அபிவிருத்தியை அல்லது வடக்குக் கிழக்கு அபிவிருத்தியைக் கருப்பொரு ளாகக் கொண்டதொரு முழுநிலை அபிவிருத்தித் திட்டம் இற்றை வரை வரையப் படவி ல்லை. ஆனால், இந்தக் குறைபாடு கருத்தி லெடுக்கப்பட்டு இவ்வாறான அபிவிருத்தித் திட்டமொன்றைத்தீட்டுவதற்கெனநிபுணர்கள் குழுவொன்றை அமைப்பதற்கும் இந்தக் குழு தனது அபிவிருத்தித் திட்ட அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான கால வரையொன்றைத் தீர்மானிப்பதற்குமான முயற்சிகள் தற்போது

முடுக்கி விடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பயனுள்ள இந்த முயற்சி வெற்றி பெற வேண்டும். எவ்வாறாயினும், வடக்கின் அபிவிருத்தி என்பதைக் கிடப்பிற் போடாது அது பற்றிய சர்ச்சைகளுடன் கூடிய உணர்வு உருவெடுத்திருப்பதும் நாட்டின் ஜனாதிபதியே இலங்கையின் ஏனைய பகுதிகள் போன்று வடக்குக்கிழக்கும் அபிவிருத்தியடைய வேண்டுமென்று அக்கறை கொள்வதும் (வீரகேசரி, 11.07.2016) நல்ல சகுனங்களாகவே கொள்ளலாம்.

இவ்வாறான அக்கறை, உணர்வு என்பவற்றின் மத்தியிலும் அபிவிருத்தி முயற்சிகளைப் பொருத்தமான ஒரு முறையிலும் சரியாகவும் இனம் கண்டு கொள்வது முதற்கண் அவசியமானதாகும். இது விடயத்தில், பாரிய முதலீடுகள் பற்றி உடனடியாகச் சிந்திக்காது சிறிய அளவிலான முதலீடுகள் பற்றி அக்கறை கொள்வது உசிதமானது. அவ்வாறு செய்யும் போது, எமது சூழலிலும் எமது வீட்டுத் தோட்டங்களிலும் பெற்றுக்கொள்ளக் கூடிய மரக்கறி, பழங்கள் என்பவற்றைப் பெறுமதி சேர்த்து உள்நாட்டுச் சந்தைகளுக்கு்றே முதற்கண் தயார்ப்படுத்துவது சிறந்ததோர் ஆரம்பமாக இருக்கும். அடுத்த கட்டத்தில் பெறுமதி சேர்க்கும் தரத்தை உயர்த்தி அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைக் கருத்திற் கொள்ளலாம். அதனுடன் இணைந்ததாக இத்தகைய உற்பத்திகளை முதலிற் சிறிய அளவுகளிற் பதப்படுத்தியபின்பு படிப்படியாக அதனைப் பாரிய தொழிற்சாலை முயற்சிகளாக்கி ஏற்றுமதிச் சந்தைகளையும் இலக்கு வைக்க முடியும்.

அத்துடன், இந்த முயற்சிகளின் போது சமூகப் பண்பாட்டு அம்சங்களை உரியவாறு கருத்திற் கொள்ளுவதும் அவசியமானதொன்றாகும். குறிப்பாக, வர்க்கங்கள் சார் வளர்ச்சியின் மத்தியிலும் சாதி முறைமையை ஆதாரமாகக் கொண்ட தொழில்கள் இயங்கிய வண்ணம் இன்னமும் துடிப்புடன் இயங்கிய வண்ணம் தாம் உள்ளன. பேராசிரியர் குறிப்பிடும் 'பேசாப் பொருளைப் பேசும் போது' அவரே அதில் ஏற்பட்டு வரும் பலதரப்பட்ட மாற்றங்களையும் "யார் இந்த யாழ்ப்பாணத்தான்?" என்ற கட்டுரையில் (பப.15-16) எடுத்துரைக்கின்றார். ஆனால் பொருளாதார மட்டத்தில் அவற்றின் தாக்கம் யாது என்பது தான் எம்மைப் பொறுத்தவரை முக்கியமானது. சாதியுடன் இணைந்த தொழிற் பிரிவு எவ்வாறு உயர்மட்ட அபிவிருத்தியைத் தடை செய்கிறதென்பது பற்றிய ஒரேயொரு உதாரணத்தை மாத்திரம் குறிப்பிட்டு இந்த உரையையும் நிறைவு செய்யலாமெனக் கருதுகின்றேன்.

அது நாம் வடக்கில் அபிவிருத்தி செய்யக் கூடிய குடிவகைக் கைத்தொழிலாகும். குடிவகைகளின் உள்ளூர் நுகர்வு பிறிதொரு வகையிலான 'பேசாப் பொருளாக' இருப்பினும், அது பற்றிப் பேச விழைந்தால் இந்த நுகர்வு ஒரு கணிசமான அளவினதென்பது ஒரு நிதர்சனமான உண்மையாகும். இது விடயத்தில், முதலில், எம்மத்தியிலான இது தொடர்பான தப்பபிப்பிராயங்கள் சில நீங்க வேண்டும். குடிவகை நுகர்வு என்பது அபிவிருத்தியுடனும் நாகரிக வளர்ச்சியுடனும் இணைந்ததொன்று தான். பொதுவாக உலகளாவிய நிலையிலும் குறிப்பாக மேற்கு நாடுகளிலும் வைன் நுகர்வு என்பது தரக் குறைவானதொன்றாக ஒரு போதும் பார்க்கப்படுவதில்லை. மாறாக, எந்த ஒரு வைபவம் அல்லது நிகழ்வையும் வைன் அருந்துவதுடன் ஆரம்பிப்பது சிறப்பானதென்பதாகவே கருதப்படுகின்றது. நாமும் குடிவகைகளை ஏற்கெனவே, வெளிப்படையாக இல்லாவிட்டாலும் ஓர் ஒழிவு நிலையில், கணிசமான அளவு நுகர்ந்து கொண்டிருக்குமிடத்து அதனை ஏன் ஓர் உயர்தரப் பழக்கமாகத் தரமுயர்த்த முடியாது? அது ஏன் ஓர் ஒதுக்குப்புற நுகர்வு என்பதிலிருந்து எமது உணவு மேசைகளை அலங்கரிக்கும் ஒரு நாகரிக நுகர்வாக மாற முடியாது?

அவ்வாறு செய்வதற்கு முதலில் எம்மத்தியிலான கள்ளுக் குடிபானத்தையும் அதன் உற்பத்தியையும் தரமுயர்ந்ததொன்றாக

மாற்றுவது அவசியமானது. இன்று வரை கள் உற்பத்தி என்பது வடக்கின் சாதி முறைமையுடன் முடங்கிப் போய்க் கிடப்ப தொன்றாகும். ஆனால், அதன் காரணமாக அதன் நுகர்வு மாத்திரம் எந்த வகையிலும் குறைந்து போவதில்லை. ஆகவே, அபிவிருத்தி முயற்சிகளின் ஒரு பகுதியாக, இந்த உற்பத்தியின் தரத்தை உயர்த்துவதும் அதனை வைன் போன்ற நாகரீகமான குடிவகைகளாகத் தரமுயர்த்தும் வகையில் உரிய பதப்படுத்தல் முயற்சிகளை மேற்கொள்ளுவதும் மிகுந்த அவசியமானதென்பது எனது கருத்தாகும். இது நாளடைவில் ஒரு முக்கியமான பொருளாதார அலுவலாகத் தரமுயர்ந்து பொருளாதாரத்துக்குப் பேரளவு வருமானத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும். இது விடயத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பல வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு விஞ்ஞானக் கண்காட்சியில் அப்போதைய தாவரவியற் பேராசிரியராக இருந்த பேராசிரியர் தெய்வேந்திரராஜா தமது பரிசோதனைக் கூடத்தில் வைனை உற்பத்தி செய்து அதனைப் பார்வையாளர் சுவைப்பதற்கெனக் கண்காட்சியின் போது கொடுக்கவும் செய்தார். பல்கலைக்கழகம் போன்ற ஆராய்ச்சி நிறுவனங்கள் இது போன்ற புத்தாக்கங்களை முன்வைப்பதைத் தான் செய்ய முடியும். அவற்றை லாபம் தரும் வெளியீடுகளாக மாற்றுவது சமூகத்திலான முதலீட்டாளரின் பொறுப்பாகும். அவ்வாறானதொரு முயற்சியில் ஈடுபடுவதற்கான வாய்ப்பான ஒரு சூழல் நீண்ட காலமாகவே இல்லையென்று கொண்டாலும், தற்போது நாம் இனம் காணவும் உணரவும் கூடிய ஒரு வகையில் காலம் கனிந்து வருகின்றது. ஆகவே இத்தகைய ஒரு வேளையில் இது போன்ற முயற்சிகள் பற்றிய தீவிரமான சிந்தனையும் இந்த முயற்சிகள் வெற்றி பெறும் வகையில் சமூகப்பண்பாட்டு மட்டத்திலும் உரிய மாறுபாடுகளைக் கொண்டு வரும் வகையிலான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதும் அவசியமானதென்பது மாத்திரமன்றி மிக அத்தியாவசியமானதென்பதும் வலியுறுத்தப்பட வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


1. நித்தியானந்தம், வி., இலங்கையின் பொருளாதார வரலாறு: வடக்கு கிழக்குப் பரிமாணம், யூன் 2003, யாழ்ப்பாணம்.
2. லியோன்டியெல், லெவ்., அரசியல் பொருளாதாரம் (மொழி பெயர்ப்பு), முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்க்கோ சோவியத் யூனியன், 1975.
3. Scalpino, R.,The Politics of development Perspectives on Twentieth Century Asia, Harvard University Press, 1989.
4. சிவத்தம்பி, கா., இலக்கியமும் கருத்துநிலையும், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை - 5, 1985.